# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 23.10.2021 supeedsam.com supeedsam@gmail.com







## கிழக்கில் நிலவுகின்ற இனங்களுக்கிடையிலான சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு

### ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்!!



கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற இனங்களுக்கிடையிலான சமூக பிரச்சனைகள் காணிப் பிரச்சினைகள் மற்றும் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கான விசேட கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மூன்று சமூகங்களுக்கு இடையிலும்

02 ஆம் பக்கத்தில்...

## நான் மண் கொள்ளைக் கும்பல் தலைவனா?

### கூட்டமைப்புக்கு பதிலளித்த சந்திரகாந்தன்

(காந்தன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னைப் பழிவாங்கவும், அரசியலில் இருந்து வெளியேறவும் நல்லாட்சி அரசில் சிறையில் அடைத்தனர். ஆனால், நான் இவர்களின் சதித்திட்டத்தில் இருந்து மீண்டு மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று அதிகூடிய வாக்குகளைப் பெற்றேன். இதனைச் சகித்துக் கொள்ள முடியாத அவர்கள் தற்போது என்னை ஒரு கொள்ளைக்காரன், மண் கொள்ளைக் கும்பல் தலைவன் போன்று காட்ட முயற்சிக்கின்றனர் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், அரச தரப்பு மட்டக்களப்பு மாவட்ட எம்.பியுமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அரச தரப்பால் கொண்டுவரப்பட்ட 2021.03.10 மற்றும் 2021.04.06 ஆகிய திகதிகளில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரச பொறுப்பு

02 ஆம் பக்கத்தில்...



## 'கூட்டத்தில் புலி'யால் ஏற்பட்ட பதற்றம்

(காந்தன்)



தமிழ் தேசிய கூட்டமைப்பின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை புலிகள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் அழைத்தமையால், வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் பதற்றமான சூழ்நிலையொன்று நிலவியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், ஆலோசனைக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின் சில பிரச்சினைகளை எழுப்ப முயன்றபோதே

02 ஆம் பக்கத்தில்...

## தவறாக யாராவது கைது செய்யப்பட்டால் ஆராய்ந்து நீதி வழங்கப்படும்



(காந்தன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காரணமின்றி தவறாக யாராவது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பில் ஆராய்ந்து நீதி வழங்க ஜனாதிபதி குழுவொன்றை

02 ஆம் பக்கத்தில்...

## சுமந்திரன் தனி மனிதனாக விடயங்களை கையாள நினைப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனி மனிதனாக எல்லா விடயங்களையும் கையாள நினைப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தனியார் அலைவரிசை நிகழ்வொன்றில், அண்மையில் இடம்பெற்ற மீனவர்களுக்காகக் கடல் வலி போராட்டத்துக்கு

02 ஆம் பக்கத்தில்...



## ஞானசார தேரர் மடு தேவாலய காணிப் பிரச்சனையில் மூக்கை நுழைப்பது ஏன்?

திருக்கேதீஸ்வரத்தில் பாரியளவில் காணியை ஆக்கிரமித்து பௌத்த கோயிலை கட்டிய ஞானசார தேரர் மடு தேவாலய காணிப் பிரச்சனையில் மூக்கை நுழைப்பது ஏன்? என தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாராளு மன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு திருக்கேதீஸ்வரத்தில் பாரியளவில் காணியை ஆக்கிரமித்து பௌத்த கோவிலை கட்டிய ஞானசார தேரரிடம் எப்படி நியாயத்தை எதிர்பார்க்க முடியும் என எதிர்பார்க்க

02 ஆம் பக்கத்தில்...

## கறுப்பு பூஞ்சை' நோயினால் முதலாவது மரணம் பதிவு

இலங்கையில் 'கறுப்பு பூஞ்சை' நோயினால் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்படி நாட்டில் குறித்த நோய் தொற்றினால் ஏற்பட்ட முதலாவது மரணமாக இது பதிவாகியுள்ளது.

காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப்பெற்று வந்த நிலையில் குறித்த நபர் 'கறுப்பு பூஞ்சை' நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக கூறப்படுகின்றது.

உயிரிழந்த நபர் எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## முகக் கவசம் இன்றி போதுஇடங்களில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்

### திருமலையில் போதுமக்கள் விசனம்.

திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்

கொவிட் 19 கொரோனா பேரலை காரணமாக நாடு முற்றாக முடங்கி தற்போது வழமை நிலைமைக்கு திரும்பியுள்ள நிலையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் முகக் கவசம் அணியாமல் வீதிகளில் பயணிப்பதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

நாடு வழமைக்குத் திரும்பியுள்ளது இக் காலகட்டத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு நாட்டிற்குள் வருவதற்கு இலங்கை சுற்றுலாத்துறை அனுமதியளித்துள்ள நிலையில் திருகோணமலை கண்டி வீதி பிரதான வீதியில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இருவர் முகக் கவசம் இன்றி வீதியில் பயணிப்பதை

02 ஆம் பக்கத்தில்...







Kamal GmbH
Kamal Kredit & Hypothek

கடன்பெறுவது, வீடு வாங்குவது சம்பந்தமான ஆலோசனைகள் தேவையெனில் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.

வங்கிக்கடன் பெற்றுக்கொடுப்பதில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.

நீங்கள் 5 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கியிருந்தால் குறிப்பிட்ட வீட்டை வைத்து கடன் பெறலாம். அல்லது இன்னொரு வீடுவாங்குவதற்கு முதலீடு செய்யலாம்.

Kamal Kredit Hypothek
Zürcherstrasse 47b, 8426 Lufingen
043 3335971, 079 6502 615
swisssenthu@hotmail.com


## சிலரின் காட்டிக்கொடுப்புகளுக்கு மத்தியிலும் எமது போராட்டம் வெற்றியபெற்றுள்ளது



(தலவாக்கலை பி.கேதீஸ்)

பாடசாலைகளை ஆரம்பிக்கும் அரசின் முயற்சி படுதோல்வியடைந்துள்ளதாக ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்;

02 ஆம் பக்கத்தில்...







# மட்டக்களப்பு பேத்தாழை விபுலானந்தா கல்லூரியில் பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை





**(க.ருத்திரன்)**

நாட்டில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் மாணவர்களுக்கான பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மட்டக்களப்பு பேத்தாழை விபுலானந்தா கல்லூரியிலும் இடம்பெற்றது.

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி வைத்திய அதிகாரி ஸ்ரிவ் சஞ்ஜீவின் வழிகாட்டலில் இவ் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

2020 இல் கா.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றிய 2021 இல் கா.பொ.த. உயர் தரத்திற்கு தோற்றவுள்ள மாணவர்கள் அத்துடன் 2001 .10.16 ஆம் திகதி தொடக்கம் 2003.10.15 ஆம் திகதி வரையான வயதுடையவர்களுக்கான இவ் பைசர் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

வுடமைச்சேனை இந்து கல்லூரி, பேத்தாழை விபுலானந்த கல்லூரி,கல்குடா நாமகல் வித்தியாலயம்,கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம்,கறுவாக்கேனி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் சுமார் 500 பேருக்கு இவ் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ் சுகாதார நடவடிக்கை நாளை 23 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதால் தவறவிடுவோர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு சென்று தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு கேட்க்கப்படுகின்றனர்.

## கறுப்பு பூஞ்சை' நோயினால் முதலாவது

இவர், ஒரு வாரத்துக்கு முன்னர் உயிரிழந்துள்ள நிலையில், அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளில் அவர் கறுப்பு பூஞ்சை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றின் பின்னரான விளைவுகளால் கறுப்பு பூஞ்சை நோய் உண்டாகுமென வைத்திய நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## தவறாக யாராவது கைது செய்யப்பட்டால்

நியமித்துள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவ்வாறு யாராவது தவறாக கைதாகியிருந்தால் இந்த குழுவில் முறையிடுவதன் மூலம் குறித்த குழு அது தொடர்பில் ஆராய்ந்து ஜனாதிபதிக்கு பரிந்துரை முன்வைத்த பின்னர் ஜனாதிபதி அவ்வாறானவர்கள் தொடர்பில் முடிவெடுப்பார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

யாராவது தவறாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பில் இந்த குழுவுக்கு தெரிவிக்கலாம்.இந்த குழு ஆராய்ந்து ஜனாதிபதிக்கு பரிந்துரை முன்வைக்கும்.இதுவரை 46 பேர் தொடர்பில் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் மீளாய்வு செய்ய ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்துள்ளார் எனவும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.




## சிலரின் காட்டிக்கொடுப்புகளுக்கு மத்தியிலும் எமது போராட்டம்

அதிபர்,ஆசிரியர்களின் ஒற்றுமையான போராட்டத்தை கண்டு அரசாங்கம் அச்சமடைந்திருக்கின்றது. (21ஆம்,22ஆம்) நேற்று முன் தினமும் நேற்றும் ஒன்றிணைந்த அதிபர்,ஆசிரியர் சங்கங்கள் நடாத்திய போராட்டம் ஒரு சிலரின் காட்டிகொடுப்புகளுக்கு மத்தியிலும் பாரிய வெற்றிபெற்றுள்ளது. எமது போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அதிபர்,ஆசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றோம். நேற்று முன் தினம் 21 ஆம் திகதி நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை இராணிவத்தை பாடசாலையின் பெற்றோர்கள் அதிபர்,ஆசிரியர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுப்பட்டார்கள்.

இதுபோல நாட்டில் பல இடங்களில் பெற்றோர்கள் எமக்கு ஆதரவாக பல போராட்டங்களை நடாத்தவுள்ளனர். இதுவே எமது வெற்றிதான். நாங்கள் எமது உரிமைக்காக போராடுகின்றோம். இன்று எமது நியாயமான கோரிக்கைகளை தட்டிக் கழிக்கும் விதத்தில் அமைச்சர்கள் சிலர் செயற்படுகின்றனர். பல நாடுகளில் மக்களது தேவைகளுக்கு முன்னரிமை அளிக்கப்படுகின்றது. ஆனால் எமது நாடு அவ்வாறான நிலைபாட்டிலிருந்து விலகி இருக்கின்றது. நிச்சயமாக எமது போராட்டத்திற்கு வெற்றி கிடைக்கும். நாம் வெற்றி பெறும் வரை போராட தயாராக இருக்கின்றோம்.

எதிர்வரும் 25 ஆம் திகதி பாடசாலைக்கு சமூகமளிப்போம். அன்று முதல் மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைளை முன்னெடுப்போம். காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மட்டுமே எமது பணி இடம்பெறும். மேலதிக கடமைகள் இடம்பெறாது. 2 மணிக்கு பின்னர் பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசத்துக்கு அருகாமையில் இருக்கும் நகரங்களில் பெற்றோருடன் இணைந்து அடையாள ஆர்ப்பாட்டங்களை நடாத்த இருக்கின்றோம். அதிபர்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை அரசாங்கம் வழங்கும் வரை பல்வேறு வடிவில் எமது போராட்டத்தை முன்னெடுப்போம். எமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு போராடுவோம் என்றார்.

## முகக் கவசம் இன்றி பொதுஇடங்களில் வெளிநாட்டு சுற்றுலா

அவதானிக்க கூடியதாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது

எவ்வாறாயினும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை தெளிவுபடுத்தாமல் இருக்குமா என சந்தேகம் ஏற்றப்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வாறான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வீதிகளில் சுகாதார நடைமுறைகளை மீறி பயணிப்பதானது நாடு மீண்டுமொரு அபாயத்தை நோக்கி பயணிக்கும் என பொதுமக்கள் அச்சம் கொள்வதாகவும் நாட்டில் தற்போது கொரோனா தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முற்றுமுழுதாக நிறைவடையாத நிலையில் இவ்வாறு திருகோணமலை நகரில் முகக்கவசமின்றி வீதியால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பயணிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடையமெனவும் அவர்களுக்கான ஒழுங்கான வழிகாட்டல்கள் இல்லாமல் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதிப்பது பெரிதும் பாரதூரமான விடயமாகும் எனவும் இவ்விடத்தில் உரிய அரச அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் புத்திஜீவிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## ஞானசார தேரர் மடு தேவாலய காணிப்

முடியாது என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மடு தேவாலயத்துக்கும் அங்குள்ள 27 குடும்பங்களுக்கும் விவசாயக்காணி தொடர்பில் பிரச்சனைகள் உள்ளன. இந்நிலையில் விவசாயிகளுக்கு தலா 2 ஏக்கர் காணி எனவும் மடு தேவாலயத்துக்கு 5 ஏக்கர் காணி எனவும் தற்காலிக தீர்வு காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த பிணக்கு காணப்பட்ட போது ஞானசார தேரர் இப்போது வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அங்கு வந்த பொதுபலசேனாவின் ஞானசார தேரர் தேவையற்ற தலையீடுகளை செய்துள்ளார் என்று செல்வம் எம்.பி தெரிவித்துள்ளார்.

## சுமந்திரன் தனி மனிதனாக விடயங்களை கையாள நினைப்பதை

ரெலோ அமைப்பின் ஆதரவு இல்லை என வெளிவந்த செய்தி தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு தனிமனிதனுடைய செயற்பாடாக இந்த போராட்டங்கள் அமையக்கூடாது. விவசாயம் மற்றும் கடற்றொழில் என இரு பிரதான துறையைச் சார்ந்த மக்கள் போராட்டம் நடாத்தி வருகிறார்கள்.

இதில் தனிப்பட்ட முறையில் சுமந்திரன் திகதியை அறிவிக்கிறார். யாருக்குமே தெரியாது. இது ஒரு பாரிய பிரச்சினை.

எங்களுடைய மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்ற வேளையில் நாங்கள் இதை எப்படி கையாளலாம் என்பதை முதல் ஆராய்ந்திருக்க வேண்டும்.

அதைவிட ஒரு கூட்டு முயற்சி கட்டாயம் இருத்தல் வேண்டும். சுமந்திரன் கூட்டமைப்புக்குள்ளும் எல்லா விடயங்களையும் கையாள வேண்டும், வெளியிலும் எல்லா விடயங்களையும் கையாள வேண்டும், தமிழரசு கட்சிக்குள்ளும் எல்லா விடயங்களையும் கையாள வேண்டும் எனத் தனிமனிதனாக நினைப்பது எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

## 'கூட்டத்தில் புலி'யால் ஏற்பட்ட பதற்றம்

இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, இந்த விவகாரம் குறித்து விவாதிக்க அனுமதி மறுத்துள்ளதுடன்,மாறாக அவர்களை நோக்கியும் சத்தமிட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களை பயங்கரவாதிகள் என்று அழைத்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ .சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்ததாகவும்,இது மிகவும் துரதிஷ்டவசமான சம்பவமென்றும், இந்த சபையில் இடம்பெற்ற ஒரு சோகமான தருணம் என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தைக்கு ஆளும் கட்சி உறுப்பினரான சந்திம வீரக்கொடி மட்டுமே எதிர்ப்பை வெளியிட்டார் என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## நான் மண் கொள்ளைக் கும்பல் தலைவனா?

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TRI/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) அறிக்கைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர், மேலும் கூறுகையில்,

''என்னைப் போன்றவர்களை அரசியலில் இருந்து அகற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

சாணக்கியன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் என்னைப் பற்றி கூறியுள்ளார். என்னிடம் மண் அகழ்வுப் பத்திரம் இருப்பதாகப் பொய் கூறியுள்ளார். அதற்கான ஆதாரமாக சில விடயங்களை முன்வைத்துள்ளார். ஆனால், அது வேறு ஒரு நபர். அவர் நான் தான் என என்னைக் குற்றவாளியாக்க முயற்சிக்கின்றார்.

சாணக்கியன் எம்.பியும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மண் வியாபாரத்தில் ஈடுபட்டார் என்பதை மறந்துவிட்டார். மழை முன்னர் புற்றீசல்கள் கிளம்பி வரும். அதே போன்று மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அமைச்சர் பஸில் ராஜபக்ச கூறியவுடன் அதில் போட்டியிடத் தயாராகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் இன்று முன்வந்து போராடுகின்றனர்.

மாகாண சபைத் தேர்தல் இல்லாமல் போகவும் அவர்களே காரணம். கடந்த காலத்தில் என்னைப் பழிவாங்கி என்னை அரசியலில் இருந்து வெளியேற்ற என்னை நல்லாட்சி அரசில் சிறையில் அடைத்தனர்.

ஆனால், மக்கள் மத்தியில் நான் பிரபல்யம் பெற்று அதிகூடிய வாக்குகளைப் பெற்றுவிடுத்தேன் என்பதற்காக அதனைப் பொறுத்துக்கொள்ள முடியாது இவர்கள் என்னை ஒரு கொள்ளைக்காரன் போன்றும், மண் கொள்ளைக் கும்பல் தலைவன் போன்றும் காட்ட முயற்சிக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.


## கிழக்கில் நிலவுகின்ற இனங்களுக்கிடையிலான

அந்யோன்யமான சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் அவர்களினால் ஒரு குழு நியமிக்கப்பட்டு அக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் தொடர்பாக பிரதேச செயலாளர்கள் இதன்போது அறிவூட்டப்பட்டதுடன், இவ்விடயங்கள் தொடர்பாக எதிர்கொண்ட சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் அவர்களது தலைமையில் இடம் பெற்றிருந்தது குறித்த கலந்துரையாடலினை மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் உள்ளிட்ட குறித்த குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள உயரதிகாரிகளும், மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர்களும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலின் போது பொது மக்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று சிபாரிசுகளை முன்வைத்திருக்கும் குழுவினரால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பிரச்சனைகளுக்கான சிபாரிசுகளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு இதன் போது முன்வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக இனங்காணப்பட்ட பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்வரும் நாட்களில் முறைப்பாட்டாளர்களையும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரி களையும் பிரதேச செயலக ரீதியாக ஒரே இடத்திற்கு அழைத்து பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதாக இதன்போது ஆளுநரினால் அறிவுறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# அரச சேவை ஓய்வு நிலையாளர்களுக்கு (2016 –2019) ஏற்படுத்தப்பட்ட பாதிப்பை நீக்குதல்

இலங்கை ஜனநாயகக் குடியரசின் ஒய்வூதிய திணைக்களத்தின் ஒய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தால் ஒய்வுபெற்றவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய கொடை அளித்தல் (திறைசேரி 79) பத்திரத்தில், 01.01.2020 முதல் வழங்குவதற்காக குறிப்பிடப்பட்டிருந்த கொடுப்பனவுத் தொகையானது தற்போதைய அரசின் அமைச்சரவை தீர்மானம் ஒன்றினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால் 2016 – 2019 வரை அரச பணிகளிலிருந்து ஒய்வு பெற்றவர்கள் 01.01.2020 முதல் கிடைக்கும் என நம்பிக்கையுடன் எதிர்பாத்திருந்த உறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவுத்தொகையை இழந்து ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளனர். இதன் மூலம் அவரவர் பெற்ற சம்பள அளவுத்திட்டங்களுக்கமைய அண்ணளவாக ரூபா 6000 முதல் ரூபா 20000 வரை மாதாந்தம் ஒய்வுநியைாளர்கள் பெறவேண்டிய ஒய்வூதிய கொடுப்பனவுகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

இவைதவிர ஒய்வூதிய கொடை அளித்தல் பத்திரத்தின் அடிப்படையில் வங்கிகளிலிருந்து கடன் பெற்றஓய்வுநிலையாளர்கள் இன்று செய்வதறியாதுள்ளனர். தற்போதைய வாழ்கைச் செலவு உயர்வை சமாளிப்பதற்கும் உறுதுணையாக கைகொடுக்கவிருந்த கொடுப்பனவு மறுக்கப்பட்டதனால் கடினமான வாழ்கைப் போராட்டத்தை நடத்த வேண்டியவர்களாகியுள்ளனர்.



ஓய்வுநிலையாளர்(2016 - 2019) கூட்டம்
யாழ். மாவட்டம்





இதுதொடர்பாக பாராளுமன்றத்திலும் மக்கள் பிரதிநிதிகளால் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. இவ்வாறாக பாதிக்கப்பட்வர்கள் 100869 பேர் என சம்பந்தப்பட்ட ராஜங்க அமைச்சர் ஒருவரின் பதிலில் இருந்து தெரிய வந்துள்ளது

2016 ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றுநிருபம் இல 3/2016 இன் பிரிவு 5.2 இற்கமைய 01.01.2016 முதல் 31.12.2019 வரை ஒய்வு பெற்றவர்களுக்கு இச்சுற்றுநிருபத்தின் அட்டவணை 1 இற்கமைந்த முழுமையான சம்பள அளவுத்திட்டம் 01.01.2020 முதல் செயற்பட ஆரம்பித்ததும் 2016 முதல் 2019 வரையான காலத்தில் ஒய்வு பெற்ற அரசபணியாளரின் ஒய்வூதியமும் உரிய அறிவுறுத்தல்களுக்கமைய முழுமையான சம்பளத்தின் அடிப்படையில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய 11.11.2019 இல் நடைபெற்ற அமைச்சரவை கூட்ட தீர்மானத்துக்கமைய 10.12.2019 திகதிய பொது.நிர்வாக சுற்றறிக்கை இல 35/2019., இன் படி 2016 – 2019 வரை ஒய்வு பெற்றவர்களுக்கு இல.3/2016 சுற்று நிருபத்தின் அட்டவணை 1 இன் படியான முழுமையான சம்பளத்தை அடிப்படையாக கொண்டு ஒய்வூதிய கொடுப்பனவை வழங்க அனுமதிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதியன்று நடாத்தப்படவிருந்ததால் 20190813 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க, 2020 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் வரை, 2020 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 30 ஆம் திகதிவரையான முதல் நான்கு மாதங்களுக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகளை பேணுவதற்கு தேவைப்படும் நிதி ஏற்பாடுகளை உள்ளடக்கி தயாரிக்கப்படும் இடைக்கால கணக்கொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பொருட்டு நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரிப்புக்கு அமைச்சரவையினால் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் 02.01.2020 இல் கூடிய பதிய அமைச்சரவை 10.12.2019 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 35/2019. படியான அட்டணை 1 இற்கு அமைந்த முழுமையான சம்பளத்தின் அடிப்படையிலான ஒய்வூதியத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இடைநிறுத்த தீர்மானித்து 20.01.2020 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 35/2019.(I) உம் வெளியிடப்பட்டது.

இதன் மூலம் 01.01.2016 முதல் 31.12.2019 வரை ஒய்வு பெற்றவர்களுக்கு 01.ஜனவரி.2020 இல் கிடைக்கவிருந்த ஒய்வூதிய தொகை கிடைக்காமல் போனது.

மேற்படிகாலப்பகுதியில் ஒய்வு பெற்றவர்களுக்கு இது துரதிஷ்டமாகவும் எதிர்பாராத இழப்பாகவும் அமைந்தது. இவ்வாறு ஏன் நிறுத்தப்பட்டது என்பதற்கு புலனாகக்கூடிய நியாயமாக காரணம் எதுவும் .இன்றிய குழப்பத்தையும் ஏற்படுத்தியிருந்தது

இதனை ஆட்சேபித்து ஒய்வுபெற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் பல வீதிப்பேரணிகளும்,, உண்ணாவிரதப் போராட்டங்களும்,, கொடுப்பனவை வழங்குமாறு ஜனாதிபதிக்கு ரெலிமெயில் அனுப்பும் போராட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலையை காரணமாக வைத்து உரிய ஒய்வவூதிய கொடுப்பனவை வழங்காதிருத்தல் நீதியின்பாற்பட்ட செயற்பாடல்ல. வருகின்ற வரவுசெலவுத்திட்டத்திலாவது இவ்வநீதி களையப்படக்கூடியவாறு, ஒய்வுநிலையாளர்களின் நிறுத்தப்பட்ட ஒய்வூதிய கொடுப்பனவை மீள அரசு செலுத்துவதற்கு வேண்டிய கோரிக்கைகளை நாட்டில் உள்ள அனைத்து தொழிற் சங்கங்களும், அரசியல் கட்சிகளும் முன்வைக்க முன்வரவேண்டும்.

அரசு தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு மக்கள் பிரதிநிதிகளும் கொடுப்பனவை தற்காலிகமாக நிறுத்த காரணமாக இருந்த சம்பந்தந்தப்பட்ட தரப்புகளுக்கு மீள கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய அழுத்தங்களை பிரயோகிக்க முன்வர வேண்டும்.

.2020 ஜனவரி முதலாம்திகதி முதல் வழங்குவதற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்த ஒய்வூதிய கொடுப்பனவுக்கான தற்காலிக தடையை இவ்வாண்டு ஒய்வூதியர் தினமான ஒக்டோபர் 08 ஆம் திகதிக்குமுன், நீக்கி இன்றைய அரசு இடைநிறுத்திய கொடுப்பனவுகளை நிலுவைகளுடன் சேர்த்து ஒய்வு நிலையாளர்கள் பெற வழிசெய்வதே நாட்டிற்காக உழைத்த மரியாதைக்குரிய சிரேஷ்ட பிரசைகள் கௌரவத்துடனும் மகிழ்ச்சியாகவும் வாழவழிவகுக்கம் சுபீட்சத்தின் நோக்காக அமையலாம். .

ஆ.இளங்கோ
(ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர்).
அளவெட்டி, யாழ்ப்பாணம்.





MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை – 02



# நானிலமும் நயந்து பாராட்டிய நாடகக் கலைஞரின் சாதனைப் பயணம்!

ஒரு நாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். அவற்றில் கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமன்றி தகவல் ஊடகமாகவும், பண்பாட்டின் பிரதிபலிப்பாகவும் திகழ்கிறது. அக் கலைகளில் நாடகக் கலையும் ஒன்றாக விளங்குகிறது. நாடகம் என்பது நாடு+அகம் என பிரித்து நோக்கும் போது நாடு என்பது நாட்டில் வாழுகின்ற மக்களைக் குறிக்கும். அகம் என்பது மக்களின் உள்ளங்களைக் குறிக்கும். அதாவது மக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஒரு கலைவடிவம் நாடகம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. ஆடல், பாடல், உரையாடல், அபிநயம், இசை என பல கலைகளின் கூட்டுப் படைப்பாக விளங்கி கண்ணுக்கும், செவிக்கும், சிந்தனைக்கும் ஒரு சேர விருந்தளிக்கும் உயரிய கலையாகவும் திகழ்கிறது. இக் கலைகள் நமது ஈழத்தின் பெருமையையும், நமது பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பதோடு நம் உணர்ச்சிகளுக்கு வடிகாலாக அமைந்து நம் உள்ளத்தை தூய்மைப்படுத்துபவை.

அவ் வகையில், இவ் நாடகக் கலையில் திருக்கோணமலை மண்ணில் புகழ்பூத்து விளங்கியவரும், தனது 9 ஆவது வயதிலே நாடக அரங்கில் மேடையேறி நடித்து இற்றைக்கு 60 வருடங்களுக்கு மேலாக இத்துறையில் ஈடுபட்டு நம் மண்ணுக்கு பெருமை தேடி தந்தவரும், வலய, மாவட்ட, மாகாண, மட்டத் தமிழ்தினப் போட்டிகளிலும் ஏனைய கலாச்சாரப் போட்டிகளிலும் 10 ஆண்டுகளுக்கு மேலாக நடுவராகப் பணியாற்றி வந்தவரும், கவின்கலை மன்றத்தின் தலைவராக விளங்கியவரும், திருக்கோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச கலாசார அதிகார சபையின் உப தலைவராக விளங்கியவரும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும், சாம்பல்மேடு நாடக நூலின் ஆசிரியராகவும், ஆரம்பத்திலிருந்து இன்றுவரை நாடகத் துறைமீது அதீத ஆர்வமுள்ளோருக்கு நாடகப் பயிற்சிகளை இலவசமாக மேற்கொண்டு அவர்களுக்கான சிறந்த களத்தினை அமைத்துக் கொடுக்கும் வரை அயராது பாடுபட்டு நம் மண்ணில் இக்கலையையும் இளைய தலைமுறையினர் விரும்பி கற்று பயிற்சி பெறுவதற்கு முன்னோடியாக செயற்பட்டு வந்தவருமான ஓய்வு நிலை அதிபர், மூத்த நாடகக் கலைஞர் கலாபூஷணம் கனக. மகேந்திரா கலைஞர் அவர்களின் சாதனைக் கலைப் பயணத்தின் தொகுப்பினை இங்கு காணலாம்.

இவர் யாழ்ப்பாண மாவட்டத்தில் கீரிமலைப் பகுதியில் காலஞ்சென்ற கனகராசா அம்பிகை என்போருக்கு மகனாக 1946ஆம் ஆண்டு பிறந்த இவர் திருக்கோணமலை மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்டவர். இவரது கலைப் பிரவேசமானது அவரின் 9ஆவது வயதினிலே ஆரம்பமாகிவிட்டது. சுளிபுரத்தில் மாமனாரின் நகுலகான நாடக சபாவின் நாடகத்தை பார்க்கவென இவரது தந்தை கனகராசா குடும்பத்தோடு அழைத்துச் சென்றார். நடுநிசிப் பொழுது இவர் நல்ல நித்திரை. அன்று நல்ல தங்காள் நாடகத்தில் இலங்கையில் வாழ்ந்த தென்னிந்திய ஸ்திரிபாட்

நடிகை வு.க.இராமலெட்சுமி நல்ல தங்காளாக நடித்துக் கொண்டிருந்தார். அவ் நாடகத்தில் மூத்த பிள்ளையாக நடிக்கும் கதாபாத்திரம் வராமையினால் இவரது தந்தை திடீரென நித்திரைத் துயரில் இருக்கும் இவரை மேடையில் ஏற்றிவிட்டார். நல்லதங்காள் 6 பிள்ளைகளையும் கிணற்றுக்குள் போட்டு விட்டாள். கடைசியாக என்னைத் தூக்க வரும்போது நால்வர் நின்று, 'ஓடு ஓடு மாட்டன் என்று சொல்லு அம்மா ஏன் எங்களைக் கொல்லுகிறாய், சகோதரங்கள் எங்கே என்று கேள் என மாறி மாறிச் சொல்லிக் கொடுத்து, அவரும் ஏதோ சொன்னதைக் கேட்டு; செய்து விட்டார். மேடையால் இறங்கும் போது அவ் நாடகத்தில் சம்மந்தப்பட்டவர்கள் எல்லோரும் இவரை



புகழ்ந்து பாராட்டினார்கள். திடீர் நடிப்பில் நன்றாக நடித்தார் என்று வாழ்த்தினார்கள். இதுவே அவரது முதல் நாடகப் பிரவேசமாகும்.

அதனைத் தொடர்ந்து அண்ணாவியரான அவரது பேரனார் வசனமும், பாட்டும் எழுதி அவரை அடிக்கடி தொடர்ந்தும் ஊக்குவித்தார். தொடர்ந்து பாடசாலை நாடகங்களில் 11 வயதிலிருந்து நடிக்கத் தொடங்கினார். காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியின் இல்ல மட்ட நாடகப் போட்டியில் இவரது நாடகம் முதலிடம் பெற்றது. நடுவர்களில் ஒருவராக நடிகமணி வி.வி.வயிரமுத்து இவரது நடிப்பைப் பாராட்டியதோடு அவர் தனது நாடகங்களின் சில மேடைகளில் நடிக்க வைத்தார். 1962களில் அவர் கல்வி கற்ற பாடசாலையில் ஆசிரியராக இருந்த கலைப்பேரரசு யு.வு.பொன்னுத்துரையின் வல்லவனுக்கு வல்லவன், நல்ல மனைவி, நிறைகுடம் ஆகிய நாடகங்களில் நடிப்பதற்கு வாய்ப்பளித்தார். இவர் க.பொ.த.சாதாரண தரம் படிக்கும் காலத்தில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள் பலர் இணைந்து காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம் எனும் கலை இலக்கிய சமூக விளையாட்டுத்துறைகள் சார்ந்த மன்றத்தை ஆரம்பித்து வருடா வருடம் ஆண்டுவிழா, பாரதிவிழா, நாடகப் போட்டிகள், கலைத்துறைப் போட்டிகள், கவி அரங்கம், விவாத அரங்கம் போன்றவற்றை நடாத்தி வந்தனர். அவ் மன்றத்தில் நீண்டகாலம் நாடகத்துறைச் செயலாளராகவும், பின்னர் அதன் தலைவராகவும் இருந்து வந்துள்ளார்.

இவ் மன்றத்திலிருந்து புயல் அடங்குமா, மாவீரன் அலெக்சாண்டர், தமிழ் தந்த வாழ்வு, மானவீரன் கும்பகர்ணன், பாஞ்சாலி சபதம், மந்தரை சூழ்ச்சி, மனக்கோயில், வீரகாவியம், பயித்தியம் எழுதிய கவிதை, உயிர் உனக்கே, பொன்னாத்தை, குடிப்பேண்டி பொலிடோல், முடிச்சு போன்ற நாடகங்களில் அமரர்.பொன்.கணேசமூர்த்தி, அமரர்.நா.கருணானந்தசிவம், முன்னாள் ரூபவாஹினிக் கூட்டுத்தாபன நாடகத் தயாரிப்பாளர் பி.விக்னேஸ்வரன் ஆகியோருடன் நடித்துள்ளார். மன்றத்தின் மூலம் வாரந்தோறும் அக்காலத்தில் காங்கேசன்துறை மனநோயாளர் வைத்தியசாலையில் நோயாளர்களின் மனதுக்கு இதமளிக்கும் கலை நிகழ்வுகளையும் நடத்தினார்கள். 1966களில் இளவாலை இளங்குமரன் கலாமன்றத்தில் கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்களின் நெறியாள்கையில் கண்ணீர், நீதிக்கொருவன் ஆகிய நாடகங்களிலும், கவிஞர் கதிரேசர்பிள்ளையின் நெறியாள்கையில் நீ செய்தது சரி நாடகத்திலும் நடித்துள்ளார்.

தொடர்ச்சியாக அவரது கல்விப் புலமையை மென்மேலும் வளர்த்துக் கொண்டு நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் கடமையாற்றி வந்தார். 1966இல் திருக்கோணமலை துறைமுகத்திலும,; 19%4இல் திருக்கோணமலை ப.நோ.கூ.சங்கத்திலும் பணியாற்றினார். 19%8 இல் கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும், 1985இல் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும், 1989இல் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராகவும் கடமை புரிந்தார். 1999இல் திருக்கோணமலை செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றி 2003இல் அதே பாடசாலையில் அதிபராக பணிபுரிந்து 2006இல் ஓய்வுப் பெற்றார். 2008 இல் ஒபர் சிலோன் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றியிருந்தார்.

கண்டாவளை அரசினர் வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்த வேளை இவர் அவள் ஒரு காவியம், வீரகாவியம், போலிகள், ஒரு புஸ்தகம் ஆகிய நாடகங்களை எழுதி மேடையேற்றினார். 19%%களில் திருக்கோணமலை தமிழர் விடுதலைக் கூட்ட



ணியின் திருக்கோணமலை மாநாட்டில் முற்றிலும் பெண்களைக் கொண்ட வீரகாவியம் நாடகத்தை முற்றவெளி மைதானத்தில் மேடையேற்றிய பெருமையும் இவரைச் சேரும். அத்துடன் அதே குழுவினருடன் காவியம் வரலாற்றுக் கற்பனை நாடகத்தை திருக்கோணமலை இந்துக்கல்லூரி சம்பந்தர் அரங்கில் மேடையேற்றி இருந்தார். 2008இல் திருகோணமலை ஒபர் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் சார்பில் ஜர்ஜஏஸ எயிட்ஸ் எதிர்ப்பு பிரசார நாடகங்களாக புட்டிப் பால், இரத்தம் இரத்தம் ஆகிய நாடகங்களையும் மது, போதைவஸ்து, வீட்டு வன்மமுறை, இளவயதுத் திருமணம், கட்டாயக்கல்வி இன்மை, சி



றுவர் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு எதிரான சமூக விழிப்புணர்வு நாடகம் சாம்பல்மேடு ஆகியவற்றை திருகோணமலையின் பின் தங்கிய பகுதிகளில் மேடை ஏற்றினார்.

அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னரே இவ் ஒபர் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் ஒரு தொண்டராக இணைந்து எயிட்ஸ் நோய்த் தடுப்புப் பிரிவில் சமூக விழிப்புணர்வு நாடகங்களைச் செய்ய வாய்ப்பளித்ததும், அந் நாடகங்களுக்கு நூலுருவங் கொடுத்து ஆவணப் படுத்தும் அவரது கோரிக்கையினையும் நடைமுறைப்படுத்தி சாம்பல்மேடு எனும் புத்தகத்தினை 2009ஆம் ஆண்டில் வெளியிட்டார். நாட்டில் நடந்தேறிய வன்முறைகளில் ஆகுதியான் இனிய அன்புள்ளங்களுக்கு சமர்ப்பணமாகவும், நீண்ட கலைப்பயணத்தின் மூலமான நிழற்சுவடாகவும் இந் நூலினைப் படைத்தார். இந் நூலில் இடம்



06 ஆம் பக்கத்தில் மிகுதி..,

# நானிலமும் நயந்து பாராட்டிய
## நாடகக் கலைஞரின் சாதனைப் பயணம்!

பெற்ற தாளலய நாடகம் புட்டிப்பால், இரத்தம் இரத்தம், விழிப்புணர்வு வீதி நாடகம் ஆகிய மூன்றும் சாம்பல்மேடு திருக்கோணமலை நகரசபை அரங்கு, அலஸ்தோட்டம், மூதூர், கிளிவெட்டி, பட்டித்திடல், புளியடிச்சோலை, கங்குவேலி, ஈச்சிலம்பற்று, பூநகர், சின்னக் குளம், முத்துச்சேனை ஆகிய இடங்களில் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரபல திரைப்பட நடிகை அனோஜா வீரசிங்கவினால் நடாத்தப்பட்ட அபினா அக்கடமியின் 10நாள் நாடகக் கலைப்பயிற்சியில் கலந்து கொண்டார். திருக்கோணமலை அலஸ்தோட்டம் கிராம சிறுவர்களுக்கு மீண்டும் வாழ்கிறோம் நாடகத்தைப் பழக்கி அரங்கேற்றியுள்ளார். திருக்கோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக கலாசாரப் பேரவையில் இவரது நெறியாள்கையில் மனிதத்தை தேடும் மனிதன் நாடகம் அரங்கேறி பலரது பாராட்டுக்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய பாடசாலைகளில் இவரது நெறியாள்கையில் நாடகத்துறையினை கற்கும் அவரது மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டதன் மூலம் அம் மாணவர்கள் பல வெற்றிகளை அடைந்தனர். கண்டாவளை அரசினர் வித்தியாலயத்தில் இவர்; நெறியாள்கை செய்த பிரகலாதனன் நாடகம் வட மாகாணப் பாடசாலைப் போட்டியில் முதலிடம் பெற்றது. இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயத்தில் அரங்கேற்றப்பட்ட தேர்வருகுது நாட்டிய நாடகம் தமிழ்தினப் போட்டியில் மாவட்டத்தில் முதலிடம் பெற்றது. அத்தோடு சிலம்புச் செல்வி வரலாற்று நாடகம் இலக்கிய நாடகங்களில் முதலிடம் பெற்றது. காத்தவராயன் சிந்துநடைக்கூத்து நாட்டுக்கூத்துக்களில் முதலிடம் பெற்றது. மயான காண்டம் இசை நாடகப் போட்டியில் இரண்டாமிடம் பெற்றது. திருக்கோணமலை செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலய மாணவர்கள் நடித்த புத்திமான் பெலவான் சிறுவர் நாடகம் சிறுவர் அரங்கப் போட்டியில் மாவட்டத்தில் முதலிடமும், களியாட்டம் சிறுவர் நாடகம் வலயத்தில் இரண்டாம் இடமும் பெற்றது.

இவரது மனைவி அன்னலக்ஸ்மி கனகமகேந்திரா ஆவார். இவர்களுக்கு ஹம்சானந்தி, நிதர்ஷனா, மயூரதன் எனும் 3 பிள்ளைகள்





உள்ளனர். அவரின் கலை வாரிசுகளாகவே உள்ளார்கள். இவர் நாடகக் கலைத்துறையில் பெற்ற விருதுகளாக 2010இல் 'கலாபூஷணம்' விருதும், 'பிரதேச சாகித்திய விருதும்', கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 'முதலமைச்சர்' விருதும், 2013இல் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினால் 'தமிழ் எழில்' விருதும், 2014இல் 'நகர முதல்வர்' ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார்.

கலை என்பது ஒரு மனிதனின் உயிர்நாடி. ஒவ்வொரு கலைஞனும் கலைக்காக வாழ வேண்டும். கலையினை வளர்த்தெடுக்க தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்ற எண்ணத்தினை ஒரே இலக்காகக் கொண்டு சமுதாயத்திற்குத் தேவையான ஒவ்வொரு நாடகத்தையும் விரும்பி கற்க ஆர்வம் காட்டும் திறமையான அனைவருக்கும் இலவசமாக பயிற்றுவித்து அதனை அரங்கேற்றி அதன் மூலமாக தன் மனதில் முழுமையான மகிழ்ச்சியையும், திருப்தியையும் பெற்று திழைத்தவர் என்ற பெருமையும், கர்வமும் இவரையைச் சாரும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழின் தொண்மையான கலை வடிவங்களில் ஒன்றாக விளங்கும் இவ் நாடகக் கலையினை மானசீகமாக நேசித்து வாழ்ந்து, இளைய தலைமுறையினர் இக் கலையை விரும்பி கற்று நம் திருக்கோணமலை மண்ணுக்கு பெருமை சேர்த்து நம் மண்ணின் இவ் தனித்துவமான கலையினையும் உலகறியச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை மட்டும் உயிர்நாடியாக கொண்டு வாழ்ந்து வந்த இவரை உலகையே முடக்கியுள்ள கொரோனா பெருந்தொற்றானது காவு வாங்கிச் சென்றமை நம் மண்ணுக்கு உண்டான பேரிழப்பாகும்.

நவீனயுகத்தின் மாற்றங்களினால் நமது பாரம்பரிய கலைகள் மருவிக் கொண்டு செல்கின்ற வேளையில் மாணவர்களும், இளைஞர்களும் நம் மண்ணின் பெருமைமிக்க கலைகளில் ஈடுபடுவதற்கான ஆர்வம் குறைவான நிலையிலே காணப்படுகிறது. மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமென்றே கற்கின்றார்களே தவிர கற்கின்ற பாடத்தில் பாண்டித்தியம் அடைய வேண்டுமென நினைப்பதில்லை. பரீட்சை மையக்கல்வியாகவே காணப்படுகின்றது. மேலும் பாடசாலை கலை நிகழ்வுகளிலும் ஈடுபடுவதற்கான சூழல் மாணவர்கள் மத்தியில் மிகக் குறைவாகவேயுள்ளது. காரணம் பிரத்தியேக வகுப்புகளில் தங்களது அக்கறையினைக் காட்டி வருகின்றனர். அடுத்து இளைஞர்களும் நமது பாரம்பரிய கலைகளை விடுத்து மேற்கைத்தைய கலர்சாரக் கலைகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந் நிலைப்பாடு மாறி வருடந்தோறும் நமது பாரம்பரிய கலைகளை பிரதிபலிக்கும் வண்ணம் பாடசாலைகளிலும், அரச இடங்களிலும் நிகழ்வுகளை நடாத்த வேண்டும். இது குறித்து கலைஞர்கள் சிந்திக்க வேண்டும். கலைஞர்கள் மட்டுமன்றி சமூக ஆர்வலர்கள், ஊடகங்கள், பொறுப்பதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பதே இவரது எதிர்பார்ப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருக்கோணமலை மண்ணில் பாராம்பரிய கலைகளில் ஊறித் திழைத்த பல முத்த கலைஞர்களில் ஒருவராக திகழும் இவர் நம் மண்ணில் இவரது நாடகக்கலையினை வியந்து பார்க்க வைத்ததோடு இவரது கலையினை நம் மண்ணில் அழியாப் பெருமையோடும், புகழோடும் வேரூன்றச் செய்த நம் வீரத் தமிழ் மகனும், தனது நாடகங்களை மேடையேற்றி தலை நிமிரச் செய்த தங்கமகனும் ஆகிய எம் மண்ணின் சொத்தான சொர்க்கநாதனான இவர் எம்மை விட்டுச் சென்றாலும் அவரின் வரலாற்றுப் பெருமையின் அடையாளம் நம் மண்ணின் மட்டுமல்லாது பிரபஞ்சம்; முழுதும் என்றுமே நிறைவாக வாழ்ந்து கொண்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**தொகுப்பு :- திருமலை தட்சாயினி ஞானசங்கரன்**








நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com




# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனின் வழக்கில் அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் ஈடுபாடு..!

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையளிக்கப்பட்ட இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் விடுதலை குறித்து அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU) மகிழ்ச்சியடைகிறது. இது தொடர்பான நீதிமன்ற வழக்கு அமர்வுகளை எதிர்காலத்திலும் அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU) மிக நெருக்கமாக கண்காணிக்கும் இவ்வாறு, கடந்த 18 ஆம் திகதிய அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் (IPU) உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம், 24 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டம் (தற்காலிகப் பிரிவு) 1979 இன் 48 ஆவது சட்டப்பிரிவின் கீழ், சி.ஐ.டி யினரால் கைது செய்யப்பட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், 177 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டு பின்னர், இம்மாதம் 14 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினரான ரிஷாட் பதியுதீனின் வழக்கு தொடர்பில் அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU) தனது முழுக்கவனத்தையும் செலுத்தியிருந்தது.

உலகளாவிய ரீதியில் 13 பிராந்திய பாராளுமன்றங்களையும், 179 நாடுகளிலுள்ள பாராளுமன்றங்களில் அங்கத்துவத்தினை கொண்டதுமான அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU), ஒரு சர்வதேச அமைப்பாகும்.

1889 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஒன்றியம், ஜனநாயக ஆட்சியையும், அதன் பொறுப்புக் கூறலையும் ஊக்குவித்து, உத்வேகமளிக்கும் ஆரம்ப இலக்கை கொண்டதாகும். அத்துடன், இந்த ஒன்றியம் ஐ.நா பொதுச் சபையில் நிரந்தரமான அவதானிப்பாளர் தகைமையையும் பெற்றுள்ளது. ஐ.நா சபை விவகாரங்களில் குறிப்பிடத்தக்களவு தமது செல்வாக்கினை செலுத்தி வரும் அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU), ஐ.நா அமர்வுகளில் எண்ணற்ற பிரேரணை நிறைவேற்றலிலும் தனது பங்களிப்பினை நல்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் (IPU) புலன்விசாரணைகள் ஒருபோதும் பகிரங்கப்படுத்தப்படுவதுமில்லை.

மேலும், இந்த வருடம் நவம்பர் மாதம் ஸ்பெயின், மட்ரிட் நகரில் இடம்பெறவிருக்கும் அமர்வின் போதும், ரிஷாட் பதியுதீனின் கைது தொடர்பிலும், அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU) தனது கவனத்தை செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வாழைச்சேனை – கறுவாக்கேணி அருள்மிகு ஆலகண்டி சிவன் ஆலய இராஜகோபுர திருப்பணிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(ரக்ஸனா)





கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட திருமலை பிரதான வீதியில் அமைந்துள்ள பழம்பெரும் ஆலயமான கறுவாக்கேணி ஆலகண்டி சிவன் ஆலயத்திற்கான இராஜகோபுர திருப்பணிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வியாழக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 12.15 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. பிள்ளையான் கஜரூப சர்மா தலைமையில் பூர்வாங்க கிரியைகள் இடம்பெற்று பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.

பிரபல வர்த்தகர் ஐயாத்துரை நிர்மலகாந்தன் அவர்களின் நிதியுதவியுடனும், பொதுமக்களின் பூரணமான பங்களிப்புடனும் இடம்பெறும் இவ் இராஜகோபுர திருப்பணிக்கான நிகழ்வில் ஆலய தலைவர் மனோகரன், செயலாளர் தவசுதன், பொருளாளர் மோகன் மற்றும் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் கோறளைப்பற்று பிரதேச செயலக இந்துகலாசார உத்தியோகத்தர் நே.பிருந்தாபன், இத்திருப்பணிக்கான உதவியை நல்கும் பிரபல வர்த்தகர் ஐ.நிர்மலகாந்தன், பிரதேச இந்துபெருமக்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.



## தலவாக்கலை பகுதியில் மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்கல்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்துக்குட்பட்ட பிரதேச மாணவர்களுக்கு முதல் தடவையாக பைசர் தடுப்பூசி வழங்கும் பணிகள் 22.10.2021 ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த தடுப்பூசி 18-20 வயதுக்குட்பட்ட உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு செலுத்தப்பட்டன. அந்தவகையில்; கொட்டகலை தேசிய பாடசாலை, கேம்பிரிஜ் கல்லூரி, யதன்சைட் தமிழ் மகா வித்தியாலயம்;, திம்புல்ல தமிழ் மகா வித்தியாலயம், ஸ்டோனிகிளிப் தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளில் கல்வி பயிலும் உயர் தர மாணவர்கள் 954 பேருக்கு கொட்டகலை தேசிய பாடசாலையிலும் தலவாக்கலை தேசிய பாடசாலை,, சுமன மத்திய கல்லூரி, வட்டகொட தமிழ் மகா வித்தியாலயம், பாரதி தமிழ் வித்தியாலயம், சென்கிளையார் தமிழ் வித்தியாலயம்,புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் உயர் தரம் கற்கும் 722 மாணவர்களுக்கு தலவாக்கலை தேசிய பாடசாலையிலும் 22.10.2021 பைசர் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

## சத்திய சாய் பாபா சேவா நிலையத்தினூடாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கல்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை லிந்துலை நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழ்வாதாரத்தை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 147 குடும்பங்களுக்கு தலவாக்கலை சத்திய சாய் பாபா சேவா நிலையத்தினூடாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வு தலவாக்கலை நகர சபை வளாகத்தில் இடம்பெற்றது. இந்த உலர் உணவு பொருட்களை தலவாக்கலை லிந்துலை நகர சபையின் தலைவர் லெ.பாரதிதாசன் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் தலவாக்கலை சத்திய சாய் பாபா சேவா நிலையத்தின் தலைவர் இராமையா,செயலாளர் மணிமுத்து மகேஸ்வரன், உபதலைவர் சங்கபிள்ளை இளங்கோவன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

## சைவப்புலவனாக சைவத்தமிழ் காவலனாக வாழ்ந்து வழிகாட்டியவர் சைவப்புலவர் செல்லத்துரை



ஈழத்திருநாட்டில் சைவப்புலவர் என்ற சொல்லால் அனைவரும் மதித்த ஆற்றலாளர் உயர் பண்பாளர் சைவத்திற்காக தன்னை அர்பணித்து சைவவாழ்வு வாழ்ந்த பெருந்தகை அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் உபதலைவர்

சைவப்புலவர்,கலாபூசணம்.சு.செல்லத்துரை அவர்கள் 21.10.2021 வியாழக்கிழமை இறையடியில் பிறவா இறவா நிலை பெற்றார்.1938.03.28 ஆம் திகதி மண்ணுலகில் உதித்தவர்.

நெஞ்சு கனக்கின்றது ஆற்றமுடியாத துயரம் சைவப்புலவர் சங்கத்தின் செயலாளராக தேர்வுச்செயலாளராக உபதலைவராக நீண்ட தசாப்தமாக சங்கத்திற்காகவே தன்னை அர்ப்பணித்து பணியாற்றி பல சைவப்புலவர்களை உருவாக்கிய ஆலமரம் சாய்ந்து விட்டது . செல்லத்துரை ஐயா அவர்கள் ஆழ்ந்த சைவசித்தாந்தப் புலமையும் சைவவாழ்வியல் சிந்தனை அறிவுப் புலத்தையும் இலக்கிய இலக்கணத்தில் உயர் வித்தகராயும் எந்த விடயத்தையும் எந்தவேளையிலும் தெளிவு படுத்தி ஐயம் தீர்க்கும் அறிவுக்களஞ்சியம் ஒய்ந்து விட்டது.

சிறந்த அதிபராக சொல்வன்மை மிக்க பேச்சாளராக,சித்தாந்த வித்தகராக,அரிய நூல்களை ஆக்கிய விற்பன்னராக விளங்கிய பெருமகன் விடைபெற்றார். ஆயிரம் பிறை கண்ட வாழ்வு சித்தாந்த வகுப்பு நடாத்தி தன்மாணவர் ஐயம் தீராத்து அறிவுப் பசி போக்கிய உயர் ஆற்றலாளன் எவர் ஐயத்தையும் தெளிவு படுத்தும் திறமை இனி இவரைப் போல் யாரைக் காண்பது என் செய்வது எப்போதே முடிந்த காரியம் விதியை யார் அறிவார் காலம் தன்கணக்கை முடித்துக் கொண்டது .

திருமூலர் குருபூசை நாளில் விண்ணக அழைப்பு சிவப்பணிக்கு சிவப்பரம் பொருளின் அழைப்பாகும் . கண்நிறைந்த சைவப்பொலிவுடைய அகபுறத் தோற்றம் காலம் கடந்தும் அகம் சுமக்கும். என்றும் மறக்கமுடியாது ஐயா உம் நினைவும் உம் பணியும் புன்முறுவலோடு அரவணைத்து ஆற்றுப்படுத்தி அறிவூட்டி ஆலோசனை வழங்கி பலரை வழிப்படுத்தி நல்ஆற்றல் கொண்ட புலவர்களை உருவாக்கினீர் புலவர் எவ்வாறு வாழவேண்டும் என பக்குவமாய் பலருக்கும் எடுத்துக்காட்டியவர் எடுத்துக்காட்டோடு நில்லாது புலவனாக சைவக்காவலனாக வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார் புலம்பி அழுது புரண்டு கதறினாலும் மறக்கமுடியாது உம் அன்பும் அரவணைப்பும் எப்போதே முடிந்த காரியம் . காலக்கணிப்பு நம்மை நாம் தேற்றுகின்றேம். உயர்சீலரின் ஆத்மா சிவன் தாழ்களில் நித்தியப் பெருவாழ்வு வாய்கப் பெற பிரார்த்திக்கின்றோம். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெருவித்துக் கொள்கின்றோம்.

# தெ.கி.ப.க. வெள்ளிவிழாவை முன்னிட்டு பல்கலைக்கழக ஆவணக்காப்பகம் வைபவ ரீதியாக ஆரம்பம்!

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக ஸ்தாபகர் தினத்தினையும் 25வது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவினையும் முன்னிட்டு இப்பல்கலைக்கழக நூலகத்தில் ஓர் பிரத்தியோக பல்கலைக்கழக ஆவணக்காப்பகத் தொகுதியை (University Archival collection) வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கும் நிகழ்வும், அதனை விளக்கும் புத்தகக் கண்காட்சி Exhibition of Books on One People, One Nation, and One Sri Lanka எனும் தொனிப் பொருளில் ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு இன்று 23ம் திகதி, பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் தென்கிழக்குப் பிராந்தியத்திலுள்ள அடையாளம் காணப்பட்ட 10 நூலகங்களுக்கு புத்தகங்களை அன்பளிப்புச்செய்யும் நிகழ்வும் (Outreach Programme) இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழக ஏ.ஆர். மன்சூர் நினைவு மாநாட்டு மண்டபத்தில் நாளை 23ம் திகதி நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ் வைபவங்களில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர், கலாநிதி ஏ.றமீஸ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இப் பல்கலைக்கழக நூலக பிரத்தியோக ஆவணகாப்பக நூற்சேற்கைத் தொகுதியாக 850 க்கு மேற்பட்ட, பெறுமதி வாய்ந்த, கிடைத்தற்கரிய பல ஆவணங்கள்; காணப்படுகின்றன. இதில் நூல்கள், அறிக்கைகள், சிறு நூல்கள், சிறப்பு வெளியீடுகள் மற்றும் பருவ வெளியீடுகள், உலக கலைக்களஞ்சியம் உட்படப் பெரும் எண்ணிக்கையில் பல ஆய்வுக் கட்டுரைகளும் உள்ளடங்குகின்றன. இப் பிரத்தியேக ஆவணகாப்பகப் பிரிவானது பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் மிகவும் பயனுள்ளாதாக அமையும். இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக் கழக நூலகத்தில் பல்கலைக்கழக ஆவணக்காப்பகத் தொகுப்பில் அரிய நூற்சேற்கை, நிறுவனத் தகவற் சேற்கை மற்றும் பாரம்பரிய சேகரிப்புகள் (Rare Materials, Institutional Repository, and Heritage Collection) ஆகிய தலைப்புகளில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

இப் பல்கலைக்கழக காப்பகத் தொகுப்பு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக நூலக சேர்கையினை மேலும் தரமுயர்த்தும் என்பதில் ஐயமில்லை. இப்பிரத்தியோக ஆவணச் சேர்க்கையானது பல்கலைக்கழக ஆவணக் காப்பகம் (University Archival collection) எனும் பெயரில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் இடம் பெற்றிருக்கும். மேலும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக நூலகர் எம்.எம். றிபாஉத்தீன் அவர்கள் இப்பல்கலைக்கழக ஆவணக்காப்பகத் தொகுப்பு பல்கலைக்கழக நூலகத்திற்கு ஒரு வரப்பிரசாதம் எனவும் இப்பிரதேசத்திலுள்ள ஆய்வாளர்கள், புலமையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியியலாளர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய நூலகப் பாவனையாளர்கள், பொது மக்கள் ஆகியோர் இலகுவாக இவ்வாவணக் காப்பகத்தினை தங்களது ஆய்வுகளுக்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதோடு விசேடமாக வரலாறு மற்றும் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வோருக்கும் இத் தொகுப்பு பயனுள்ளதாக அமையும் என்றும் அவற்றை உபயோகித்து உச்சப் பயனடையுமாறும் கேட்டுக் கொள்கின்றார்.

# செய்கைபண்ணைப்படும் நெல்லினத்துக்கு இரசாயன பசளை அவசியம்; கவனயீர்ப்பு போராட்டம்.

(வாஸ் கூஞ்ஞ)

வரட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் விலையுயர்ந்த நெல்லினமாகிய கீரி சம்பா உற்பத்தியில் ஈடுபட்டு வரும் மன்னார் மாவட்ட விவசாயிகள் இரசாயன உரம் இல்லையேல் இவ் நெல் இன செய்கையில் ஈடுபட முடியாது என மன்னார் மாவட்ட கட்டுக்கரைக்குள திட்ட முகாமைத்துவ விவசாய சம்மேளனத்தின் தலைவர் எம்.எஸ்.சில்வா இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக கவனயீர்ப்பு போரட்டம் ஒன்றையும் முன்னெடுக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக மன்னார் மாவட்ட கட்டுக்கரைக்குள திட்ட முகாமைத்துவ விவசாய சம்மேளனத்தின் தலைவர் எம்.எஸ்.சில்வா தொடர்ந்து ஊடகத்துக்கு தெரிவிக்கையில்

இலங்கையில் நெல் உற்பத்திகளில் பெரும் பங்கு வகிக்கும் மன்னார் மாவட்ட விவசாயிகள் வரட்சி மாவட்டங்களில் பெரும் பலன் கொடுத்து வரும் கீரி சம்பா நெல்லின உற்பத்தியிலேயே எம் மாவட்ட விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இந்த நெல்லினத்துக்கு சேதன பசளையைவிட இரசாயன பசளையே மிகச் சிறந்த தொன்றாகும். எமது விவசாயிகள் அரசின் திட்டத்தின் கீழ் இவ் மாவட்டத்தில் அறுபது வருடங்களுக்கு பிற்பாடு தற்பொழுது சேதன பசளையை பாவிப்பதில் அக்கறை காட்டி வருகின்றபோதும் இவ் நெல்லினத்துக்கு முற்றுமுழுதாக நம்பி சேதன பசளையைக் கொண்டு நெற் செய்கையை செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

ஆகவே ஒரு குறிப்பிட்ட அளவு இரசாயன பசளையும் கிருமி நாசினியும் எமக்கு வழங்கப்பட வேண்டும் என நாங்கள் கோரி வந்தபோதும் இது எமக்கு கைகூடாது போகும் நிலை இருப்பதும் எமக்கு தெரியவருகின்றது. இதனால் மன்னார் மாவட்டத்தில் பெரும்போக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரம் மற்றும் கிருமி நாசினிகளை விரைவாக தடையில்லாமல் வழங்கக்கோரி எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் உயிலங்குளம் கமநல சேவை வீதியில் மன்னடர் கமக்கார அமைப்புகளால் மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இலங்கையில் நெல் உற்பத்திகளில் பெரும் பங்கு வகிக்கும் மன்னார் மாவட்ட விவசாயிகள் உரம் மற்றும் கிருமிநாசினி இன்மையால் விவசாய நடவடிக்கைகளில் பாரிய பின்னடைவுகளை சந்தித்து வருவதுடன் சேதனப் பசளை மூலம் சிறந்த விளைச்சலை பெற முடியாது என்ற காரணத்தால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது எனவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் பொது அமைப்புகள் மற்றும் விவசாயிகளும் கலந்துகொள்ள உள்ளார்கள் எனவும் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மன்னார் மாவட்ட செயலாளரிடம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட உள்ளது என்றும் இதன் ஏற்பாட்டுக் குழுவின; சார்பில் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் இவ்வாறு தெரிவித்தார்.

## திருமலை மிஹிந்துபுர வித்தியாலயத்துக்கு குடிநீர் தொகுதி கையளிப்பு




( திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நாடாளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் இஙிஉநஜஈ19 கொரோனா தொற்றினை கருத்திற் கொண்டு திருகோணமலை மிஹிந்துபுர வித்தியாலயத்திற்கு குடிநீர் தொகுதி ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது

பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம்.நௌபர் அவர்களினால் கையளிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் சுகாதார நலன் கருதி பெரும் குறைபாடாக இருந்த நீர் தேவை மற்றும் தண்ணீர் தாங்கி வசதியினை ஏற்படுத்தித் தருமாறு திருகோணமலை மிஹிந்துபுர வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் கௌரவ பிரதேசசபை உறுப்பினர் சிரியானி அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க இவ் குடிநீர் தொகுதி கையளிக்கப்பட்டது.

இவ் குடிநீர் தொகுதி அல் ஹித்துமத்துல் உம்மா அமைப்பின் அனுசரனையுடன் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட 18 பாடசாலைகளுக்கான குடிநீர் வசதிகள் அமைக்கப்பட்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி உத்தியாகபூர்வமாக பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கணக்காளர் கணேசனின் இழப்புக்கு திலகர் இரங்கல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தொழிலாளர் தேசிய சங்கத்தினையும் அதன் ஸ்தாபகத் தலைவர் வி.கே. வெள்ளையன்,கவிஞர் சிவி.வேலுப்பிள்ளை என சதாசங்கத்தை தனது நெஞ்சில் சுமந்து நின்ற கணக்காளர் கணேசன் காலமான செய்தி மிகுந்த மன வருத்தம் அளிக்கிறது அவருக்கு எனது அஞ்சலிகளை செலுத்துவதுடன் அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் களைத் தெரிவிக்கிறேன் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில் வாகனம் திலகராஜ் விடுத்திருக்கும் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பதுளை, ஹாலி எல்ல பிரதேசத்தில் பிறந்த கணேசன் பாடசாலைக் கல்வியை அடுத்து தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து கணக்காளராக உயர்ந்தவர். கொள்ளுப்பிட்டியில் அமைந்திருந்த தலைமையகத்தில் பணி செய்தவாறே கவிஞர் சி.வி.வேலுப்பிள்ளை துணைவியாரின் தலங்கம இல்லத்துடன் தொடர்புபட்டு அதே குடும்பத்தில் திருமணமும் முடித்து பல வருடங்களாக தலங்கமவிலேயே வாழ்ந்து வந்தார். சங்கம் கடன் சுமையில் இருந்த காலத்தில் அதனைப் பொறுப்பேற்றபோது, நான் பிரதிப் பொதுச்செயலாளராக தெரிவு செய்யப்பட்டு இருந்தாலும் துறைசார்ந்தவன் என்றவகையில் கணக்கு விபரங்களை மேற்பார்வை செய்பவனாகவும் கணக்காய்வுக்கு தயார் செய்பவனாகவும் கணேசன் அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டவனாக இருந்துள்ளேன். 200% முதல் 2020 தொடக்கம் வரை மாதாந்தம் இவருடனான சந்திப்பு இடைவிடாது நிகழ்ந்து வந்த ஒன்று. சங்கத்திலிருந்து என்னை வீட்டில் வந்து சந்திக்கும் ஒரே நபராக கணேசன் மாத்திரமே இருந்துள்ளார். என் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்த கணேசன் மிகவும் அமைதியான சுபாவம் மிக்கவர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் கணக்காளர் கணேசனின் அர்ப்பணிப்பான பணி போற்றுதற்குரியது. அவருக்கு எனது அஞ்சலிகளை செலுத்துவதுடன் அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்களைத் தெரிவிக்கிறேன்.

## ஆலயதலைவரின் இறுதி

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப் பழை மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத் தலைவர் கோ.கமலநாதனின் (68) இறுதி யாத்திரை நேற்று வெள்ளிக்கிழமை காரைதீவில் நடைபெற்றது.

ஆலயவளர்ச்சியில் அரும் பாடுபட்டு உழைத்த தலைவர் கோ.கமலநாதனின் இறுதி அஞ்சலி கூட்டம் ஆலய ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இரங்கல் உரைகளை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் ஆலய பதில் தலைவருமான தவிசாளருமான கி.ஜெயசிறில் அறங்காவலர் ஒன்றிய செயலாளர் சி.நந்தேஸ்வரன் ஆலய செயலாளர் க.சண்முகம் உள்ளிட்ட சிலர் உரையாற்றினர்.

ஆலயமொன்றை அமைத்து கும்பாபிசேகம் காணவிருந்த வேளையில் காலமாகியுள்ளமை வேதனையளிப்பதாக பலரும் தெரிவித்தனர்.

அன்னாரர் பூதவுடல் நேற்று22 ) வெள்ளி காலை 12மணியளவில் காரைதீவு இந்துமயானத்தில் தகனக்கிரியை இடம்பெற்றது.

## புனரமைக்கப்பட்ட எயிட்டி கிளப் பிரதமரினால் திறந்து வைப்பு






(வாஸ் கூஞ்ஞ)

கொழும்பு 07 இல் அமைந்துள்ள புனரமைக்கப்பட்ட எயிட்டி கிளப் (80 ஊடரடி) கேளிக்கை விடுதி கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் வியாழக்கிழமை இரவு திறந்து வைக்கப்பட்டது.

எயிட்டி கிளப்பினை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் முகமாக கௌரவ பிரதமர் அவ்வளாகத்தினை மின் விளக்குகளினால் ஒளிரச் செய்ததுடன்இ நினைவுப் பலகையையும் திறந்துவைத்தார்.

அதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர் புத்தகத்திலும் கௌரவ பிரதமர் கையெழுத்திட்டார்.

இதன்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உதய நாணயக்கார அவர்களினால் எயிட்டி கிளப் தகவல் சிற்றேடு கௌரவ பிரதமருக்கு வழங்கப்பட்டது.

புனரமைப்பு பணிகளை மேற்கொண்டமைக்காக கடற்படை கொமடோர் எச்.எஸ்.பாலசூரிய அவர்களுக்கு கௌரவ பிரதமரினால் நினைவு பரிசொன்று வழங்கிவைக்கப்பட்டது.

எயிட்டி கிளப் 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கையகப்படுத்தப்பட்டமை தொடர்ந்து அதன் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் புனரமைப்பு பணிகளை கடற்படையினர் பொறுப்பேற்று முன்னெடுத்தனர்.

கண்டி குயின்ஸ் ஹோட்டலின் அறை எண் 80இன் உறுப்பினர்கள் சிலர் முதலாவது கூட்டத்தை நடத்தி ஆரம்பித்து வைத்தமையால் இது எயிட்டி கிளப் எனும் பெயரில் அறியப்படுகிறது. பின்னர் இது கொழும்பு 07 சுதந்திர மாவத்தையில் நிறுவப்பட்டது.

19%1 கலவரத்தின் காரணமாக அப்போதைய அரசாங்கம் இவ்வளாகத்தை இலங்;கை இராணுவத்திற்கு ஒப்படைத்தது. 19%8ஆம் ஆண்டு மீண்டும் அரசாங்கத்தினால் எயிட்டி கிளப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

2020 நவம்பர் மாதம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படும்வரை இதன் பராமரிப்பு நடவடிக்கைகள் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற ரீதியில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனைக்கமைய இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அதற்கமைய தற்போது எயிட்டி கிளப் அலங்காரமான நிறைவை பெற்றுள்ளது.

இங்குள்ள வசதிகளை மேலும் மேம்படுத்தி விருந்தோம்பலுடன் கூடிய வோட்டர்ஸ் எட்ஜ் நட்சத்திர ஹோட்டல் அனுவத்தை எயிட்டி கிளப் ஊடாக பெற்றுக்கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தில் கௌரவ அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோஇ கௌரவ இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவாஇ மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலகஇ நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேராஇ நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உதய நாணயக்காரஇ நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீரஇ எயிட்டி கிளப் தலைவர் ரொஹந்த ஃபொன்சேகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தும் செயலமர்வு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தும் செயலமர்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தலைமையில் நடைபெற்றது.

மின் இணைப்பை பெற்றுக்கொள்ளுவதற்கான வழியனுமதி, மரங்கள் அல்லது கிளைகளை வெட்டுதல், நஷ்ட்டஈடு வழங்கல் தொடர்பான வழிகாட்டல்கள் இதன்போது ஆணைக்குழுவின் பிரதிப்பணிப்பாளர் ரோசன் வீரசூரியவால் தெளிவுபடுத்தப்பட்டது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மக்களுக்கான பல சேவைகளை மேற்கொண்டு வருகின்றது. மின் இணைப்பு மிக முக்கியமானது. மின் இணைப்பு பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான வழியனுமதி பெறும் முறை, வழியனுமதி மறுக்கப்படும் போது பிரதேச செயலாளர்களின் வகிபாகம் குறித்து சட்ட ரீதியான அடிப்படைகளை தெளிவுபடுத்த முன்வந்தமை குறித்து தமது நன்றிகளை இதன்போது அரசாங்க அதிபர் மன் தர்சன பாண்டிகோராள ஆணைக்குழுவுக்கு தெரிவித்தார்.





இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் ( காணி) பி.ஆர். ஜயரத்ன, பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கு 'பைசர்' தடுப்பூசி



(க.கிஷாந்தன்)

18-20 வயது பிரிவு மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றும் பணி நுவரெலியா மாவட்டத்திலும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆயிரத்து 676 மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுமார் 11 பாடசாலைகளைச் சேர்ந்த மேற்படி மாணவர்களுக்குகொட்டகலை மற்றும் தலவாக்கலை தேசிய பாடசாலைகளில் வைத்து காலை 8 மணி முதல் நண்பகல் 10 மணிவரை தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் ஏனைய சில சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் பாடசாலை மாணவர்களுக்கு இன்று தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

# ஆசிரியர் பணிக்குப்பகரமாக வேறு தரப்பினர் உள்நுழைவது கேவலமானது: இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஆவேசம்

(எஸ்.அஷ்ரப்கான்)

ஆசிரியர்களின் பணிக்குப் பகரமாக வேறு தரப்பினரைப் பயன்படுத்த எத்தனித்த பெருமைக் குரியவர்கள் மத்தியில் ஆசிரியர் தொழில் செய்வதனை கேவலமாகவே கருத வேண்டியுள்ள மன நிலை உருவாகியுள்ளதாக இவ்வாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் எழுந்துள்ள சமகால நெருக்கடி குறித்து விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா, செயலாளர் எம்.கே.எம்.நியார் ஆகியோர் கூட்டாக இவ்வறிக்கையினை விடுத்துள்ளனர்.அதில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிரியர் தொழிலில் பயிற்சிகளையும் பட்டம்பின் கல்விச் செயற்றிட்டங் களையும் முன்னெடுத்து வந்த நாட்டில்: குறைநிரப்பிகளைக் கொண்டு ஆசிரியப் பணியை நிரப்பிக்க எத்தனித்திருப்பது சிந்திக்கத்தக்க விடயமாகும்.

உலக இயங்கியலில் எல்லாத் தரப்பானரையும் உருவாக்கி திருப்தி காணும் ஆசிரியர் சமூகத்தின் போராட்டத்தினைக் கொச்சைப்படுத்த எடுத்த செயற்பாடுகளுக்கு பட்டதாரிப் பயிலுனர்கள் ஒத்தாசையாக இருக்க முனைந்தமை அவர்களை உருவாக்கிய ஆசிரியர் சமூகத்திற்குச் செய்த மிகப் பெரிய துரோகமாகும். தொழிற்துறையின் ஆரம்ப கட்டத்தையே பிழையான தொடக்கமாகக் கொண்ட அவ்வாறான விரல்விட்டு எண்ணத்தக்கவர்களின் எதிர்காலம் அவ்வாறே மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. மாணவர்களின் கலவியின் மீது அக்கறையற்ற அவ்வாறான செயற்பாடுகளை நாம் கண்டிக்கின்றோம்.

மாணவர்களின் நலன்கருதி நாம் எதிர்வரும் 25 ஆம் திகதி பாடசாலைக்குத் திரும்புமாறு அதிபர்-ஆசிரியர்களை அழைக்கின்றோம். கடந்த வருடம் முதல் பாதிப்புக்குள்ளாகி இவ்வருடத்தின் இரண்டு மாதங்களே எஞ்சியுள்ள நிலையில் அவர்களின் கல்வி முன்னேற்றம் குறித்து நாம் அதிக அக்கறை செலுத்த வேண்டியுள்ளது. மாணவர்களின் கல்விக்குப் பாதிப்பில்லாத வகையில் எமது போராட்டங்களை முன்னெடுக்க நாம் எண்ணியுள்ளோம்.

நூறு நாட்களைக் கடந்து விட்ட அதிபர்-ஆசிரியர்களின் போராட்ட நியாயங்களை உணர்ந்து நல்லதொரு தீர்வொன்றுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் வர வேண்டும். தொடர்ந்தும் முரண்பாட்டுச் சூழலுடன் செல்லுமானால் எதிர்வரும் காலங்களில் இருதரப்பினரும் தேவையில்லாத மனக்கசப்புகளுடன் பயணிக்க வேண்டிவரலாம்.





பாடசாலைக்குத் திரும்பும் தொழிற்சங்கங்களின் முடிவினைச் சாதகமாக்கி அரச தரப்பு நல்லதொரு முடிவினை முன்வைக்கும் என தாம் நம்புவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1 மில்லியன் செலவில் 500 குடும்பங்களுக்கான நிவாரப்பணி ஆரம்பம்

(வி.ரி.சகாதேவராஜா)

கொரோனாத் தொற்றினால் வாழ்வாதாரத்தை இழந்த ஒரு தொகுதி அம்பாறை மாவட்ட மக்களுக்கு 1 மில்லியன் ருபா (10லட்சருபா) செலவில் உலருணவு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

கனடா நாட்டிலுள்ள ? ரு டீப் ? நிறுவனம் இதற்கான நிதி அனுசரணையை கிழக்கின் பிரபல சமூக செயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான கிருஸ்ண பிள்ளை ஜெயசிறிலினூடாக வழங்கியுள்ளது.

நேற்று திருக்கோவில் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மண்டானை மற்றும் கஞ்சிகுடிச்சாறு ஆகிய கிராம மக்களுக்கு உலருணவு நிவாரணம் வழங்கும் பணி ஆரம்பித்துவைக்கப்பட்டது.



அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் உதவிபிரதேசசெயலாளர் க.சதிசேகரன் தவிசாளர் கி.ஜெயசிறில் நிவாரணப்பணி ஒருங்கிணைப்பாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இப்பணிகள் அந்தந்த பிரதேச செயலக அனுமதியுடன் முறைப்படி உரிய அதிகாரிகளைக்கொண்டு கடந்த காலங்களில் இடம்பெற்றதைப் போன்று நடைமுறைப்படுத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# ஆழ்கடலுக்குச் சென்று காணாமல் போன 4 மீனவர்களின் தகவல் 26 நாட்களின் பின்னர் கிடைத்துள்ளது

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து ஆழ்கடலுக்குச் சென்று காணாமல் போன நான்கு மீனவர்களின் தகவல்கள் கிடைத்துள்ளதாக வாழைச்சேனை துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க கடந்த மாதம் 26 ஆம் திகதி நான்கு மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்றிருந்தனர்.

இவ்வாறு கடலுக்குச் சென்ற மீனவர்கள் கரை திரும்பாததால் படகு உரிமையாளரால் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

காணமல் போன மீனவர்களை இரண்டு படகில் சென்ற எட்டுப் பேர் ஆறு நாட்கள் தேடியும் எதுவித தகவல்களும் கிடைக்காததால் தேடிச் சென்றோர் ஏமாற்றத்துடன் கரைக்கு திரும்பினர்.

இந்நிலையில், காணமல் போன நான்கு மீனவர்களும் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து சுமார் 400 கிலோ மீற்றர் தொலைவில் ஆழ்கடலில் கிடப்பதாக வாழைச்சேனை துறைமுக தொடர்பாடல் நிலையத்திற்கு தகவல் கிடைத்துள்ளன.

குறித்த மீனவர்கள் தொடர்பான தகவல்களை ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சிங்கள இன மீனவர்கள் கண்டு துறைமுகத்துக்கு அறிவித்துள்ளதாக துறைமுக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

காணமல் போன மீனவர்களை பாதுகாப்புடன் மீட்டுவர இரண்டு படகுகல் ஆழ்கடலுக்குச் சென்றுள்ளதாக படகின் உரிமையாளர் தெரிவித்தார்.

# ஆலையடிவேம்பில் பாடசாலை மாணவர்களுக்கான பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை



வி.சுகிர்தகுமார்

ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று முதல் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 18 தொடக்கம் 19 வயது வரைக்குமான பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும் பாடசாலை கல்வியை நிறைவு செய்து வெளியேறிய மாணவர்களுக்குமே இவ்வாறு தடுப்பூசியினை பெற்றுக்கொண்டு வருவதாக ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார பதில் வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதே நேரம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் ஆலோசனையின் பிரகாரம் கல்முனை பிராந்தியத்தில் பல பாடசாலைகளிலும் மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெறுவதுடன் அனைத்து மாணவர்களுக்கும் தடுப்பூசி பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இதன் மூலம் மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன் பாடசாலைகள் யாவும் திறக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகளும் தங்கு தடையின்றி இடம்பெறும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கைகளில் வைத்தியர்கள் பொதுச்சுகாதாரபரிசோதகர்கள் தாதியர்கள் குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் கடமையாற்றி வரும் நிலையில் பாடசாலை ஆசிரியர்களும் இணைந்து மாணவர்களை பதிவு செய்தல் மற்றும் ஒழங்குபடுத்தல் விழிப்பூட்டல் நடவடிக்கை என பல்வேறு செயற்பாடுகளில் முற்றும் முழுதாக ஈடுபட்டு வருகின்றனர்.

# காட்டு யானை தாக்கி மாடுமேய்ப்பவர் பலி

(ரக்ஸனா)

ஏறாவூர் பொலிஸ் பிரிவின் பதுளை வீதியை அண்டிய பகுதிக்குள் உள்நுழைந்த காட்டு யானையால் மாடு மேய்ப்பவரான வயோதிபர் ஒருவர் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேய உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வியாழக்கிழமை 21.10.2021 மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டக்கள்ப்பு பதுளை வீதியை அண்டியுள்ள கொடுவாமடு கிராமம் காளிகோயில் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மூத்ததம்பி காளிக்குட்டி (வயது 64) என்பவரே உயிழந்துள்ளார்.

மாடு மேய்ப்பவரான இவர் வழமைபோன்று தனது மாடுகளைத் தேடி செங்கலடி கறுப்புப் பாலத்தை அண்டியுள்ள பகுதிக்குச் சென்றபோது பற்றைக் காடுகளுக்குள் மறைந்திருந்த காட்டு யானையால் மூர்க்கமாகத் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது பற்றி பொலிஸாருக்குத் தகவல் அறிவிக்கப்பட்டதும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் பெரியாண்டி அமரேசன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஸ்தலத்திற்குச் சென்று சடலத்தை மீட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளையும் நடத்தி வருகின்றனர்.

சடலம் உடற்கூறாய்வுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# மர்ஹூம் ஜுனைதா ஷரீப் நினைவுப் பகிர்வு நிகழ்வு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாடறிந்த எழுத்தாளரும், இலக்கிய வாதியும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபருமான மர்ஹூம் ஜுனைதா ஷரீப் அவர்களின் நினைவுப் பகிர்வு நிகழ்வு காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (21) வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கமும், காத்தான்குடி பிரதேச கலாசார பேரவையும் இணைந்து இந்த நினைவுப் பகிர்வை நடாத்தியது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறீதர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து கொண்டு சிறப்புரையை நிகழ்த்தினார்.

இதில் மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் கலாநிதி முருகேசு தயாநிதி, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் நவநீதன், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மௌலவி எம்.எச். எம்.புகாரி, கலாநிதி எஸ்.யோகராசா சமூக ஆய்வாளர் சிறாஜ் மசூர் காத்தான்குடி பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் திருமதி ஜாயிதா ஜலால்தீன் உட்பட முக்கியஸ்தர்கள் எழுத்தாளர்கள், கலை இலக்கிய வாதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மர்ஹூம் ஜுனைதா ஷரீப் அவர்கள் மரணிப்பதற்கு முன்னர் எழுதி அச்சில் இருந்த 'விடியாத இரவு' எனும் நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் நவநீதன் அவர்களினால் அவரின் பிள்ளைகளிற்கு கையளித்து வெளியிடப்பட்டதுடன் அதன் பிரதிகள் அதிதிகளுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

நாடறிந்த எழுத்தாளரும், இலக்கிய வாதியும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபருமான மர்ஹூம் ஜுனைதா ஷரீப் தனது 82.வயதில் கடந்த 03.10.2021 ஞாயிற்றுக்கிழமை தனது வீட்டில் இறையடி சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் விருது வழங்கும் நிகழ்வுக்கான கள விஜயம்

(சர்ஜுன் லாபீர்)

மக்களுக்கான அரச நிர்வாக செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாகவும், இலகுவாகவும் செயற்படுத்தும் நோக்கிலும், அரச நிர்வனங்களின் உற்பத்தி திறன் செயற்பாட்டினை மேம்படுத்த செய்யும் நோக்கிலும் தேசிய உற்பத்தி திறன் செயலகத்தினால் வருடாந்தம் அரச காரியலயங்களின் செயற்பாடுகளை ஆய்வு செய்து விருது வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கல்முனை பிரதேச செயலகத்தின் உற்பத்தி திறன் செயற்பாட்டை கண்காணிக்கும் கள விஜயம் நேற்று உற்பத்தி திறன் செயலத்தின் அம்பாறை மாவட்ட செயலக உத்தியோகத்தர்ககினால் மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியின் ஆலோசனைக்கு அமைவாக கிளைத் தலைவர்ககினாலும்,காரியாலய உத்தியோகத்தர்களினாலும் சிறப்பான முறையில் ஒவ்வொரு கிளைகளும் உற்பத்தி திறன் முறைமைக்கு ஏற்ப வடிவமைக்கப்படு இருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

பிரதேச செயல்க உற்பத்தி திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.பாயிஸா,எப் நிஸ்ரியா ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# 41 நாள் நினைவஞ்சலி

**23.10.2021**



| அன்னை மடியில் | இறைவனடியில் |
| --- | --- |
| 26 | 13 |
| 10 | 09 |
| 1974 | 2021 |

## அமரர். கிருஸ்ணபிள்ளை உதயகுமார்

"ஆழ்ந்த அனுதாபங்கள்"

**Balakanthan family**

No : 32/3 Ethirmanasingam Road, Amirthakaly Batticaloa.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க

**Supeedsamtv.com**




supeedsam epaper, supeedsam videos, supeedsam news

www.supeedsam.com